தினமணி

# வேளாண் காப்பீட்டுத் தொகைக்காக காத்திருக்கும் விவசாயிகள்!

ப. இசக்கி

First Published : 27 Oct 2010 03:02:01 AM IST

திருநெல்வேலி : திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த 201 விவசாயிகளுக்கு தேசிய வேளாண்மை காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் தமிழக அரசு வழங்க வேண்டிய இழப்பீட்டுத் தொகை ரூ. 6.54 லட்சம் இன்னும் வழங்கப்படவில்லை.

வேளாண்மை காப்பீட்டுத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ள விவசாயிகள் எவரும் முன்வருவதில்லை என குறை கூறப்பட்டு வரும் சூழ்நிலையில், காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்தவர்களுக்கான இழப்பீட்டுத் தொகை வழங்குவதில் ஏற்படும் காலதாமதம் அவர்களை விரக்தியடையச் செய்துள்ளது.

புயல், வெள்ளம், நிலச்சரிவு, வறட்சி, பூச்சி, நோய்த் தாக்குதல், இயற்கைத் தீ, மின்னல் போன்றவற்றால் பயிருக்கு சேதம் ஏற்பட்டால் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குதல், விவசாயத்தில் முற்போக்கான நவீன தொழில்நுட்பங்கள், வேளாண் வழிமுறைகள் மற்றும் அதிக விலையுள்ள இடுபொருள்கள் பயன்படுத்த ஊக்கமளித்தல், விவசாய வருமானத்தை உறுதிப்படுத்துதல், உணவு மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்குதல் மற்றும் ஊக்கமளித்தல் ஆகியன தேசிய வேளாண்மை காப்பீட்டுத் திட்டத்தின் குறிக்கோள்.

நெல், கம்பு, சோளம், மக்காச்சோளம், ராகி, உளுந்து, பச்சைப் பயறு, துவரை, நிலக்கடலை, எள், கரும்பு, பருத்தி, உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், இஞ்சி, மஞ்சள், மரவள்ளிக் கிழங்கு, வாழை ஆகிய பயிர்களுக்கு இந்த காப்பீடு அளிக்கப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் நெல், மக்காச்சோளம், சூரியகாந்தி, வாழை, பருத்தி உள்ளிட்ட குறிப்பிட்ட சில பயிர்களுக்கு இந்தக் காப்பீடு அளிக்கப்படுகிறது.
பயிர் காப்பீடுக்கான மொத்த பிரீமிய தொகையில் 50 சதவீதத்தை விவசாயிகள் செலுத்த வேண்டும். விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில் எஞ்சிய 50 சதவீத தொகையை தமிழக அரசு செலுத்தும். இதேபோல், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீட்டுத் தொகையில் 50 சதவீதத்தை அகில இந்திய வேளாண்மை காப்பீடு நிறுவனம் அளிக்கும். எஞ்சிய 50 சதவீத தொகையை தமிழக அரசு அளிக்கும்.

2009-10 ம் ஆண்டில் இந்தக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் தென்காசி, செங்கோட்டை, பாவூர்சத்திரம் வட்டாரங்களில் உள்ள பண்பொழி, இலத்தூர், தென்காசி, கல்லூரணி ஆகிய குறுவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் கார் பருவ நெல் பயிரை காப்பீடு செய்திருந்தனர். அந்த ஆண்டில் மேற்கூறிய குறுவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி சராசரி மகசூலைவிட குறைவான மகசூல் கிடைத்த 201 விவசாயிகள் தேசிய வேளாண்மை காப்பீட்டுத் திட்டத்தில் இழப்பீடு பெற தகுதி பெற்றனர்.
எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீடு நிதி ரூ. 6.54 லட்சத்தை அகில இந்திய வேளாண்மை காப்பீடு நிறுவனம் அண்மையில் வழங்கியுள்ளது. அந்தத் தொகையானது பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. ஆனால், தமிழக அரசு வழங்க வேண்டிய அதே அளவு தொகையான ரூ. 6.54 லட்சம் இன்னும் வழங்கப்படவில்லை.

ஒரு பருவத்தில் பயிரில் இழப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கான காப்பீட்டுத் தொகை, அடுத்த பருவம் தொடங்கும் முன்பு கிடைத்தால்தான் அது உண்மையான பயனை அளிக்கும். வங்கி அல்லது நிதி நிறுவனங்களில் கடன் பெற்று வேளாண்மை செய்யும் விவசாயிக்கு இழப்பீடு கிடைக்க காலதாமதமானால் அடுத்த பருவத்துக்கு அவர் மேலும் கடன் பெறுவதிலும் சிக்கல் ஏற்படும்.
"2009-10ஆம் ஆண்டு கார் பருவத்துக்கான காப்பீட்டுத் தொகையானது, கடந்த ஆண்டின் பிசானப் பருவம் முடிந்து, இந்த ஆண்டின் கார் பருவமும் முடிவடைந்து பிசானப் பருவம் தொடங்கவுள்ள நிலையில் சுமார் 10 மாதங்கள் ஆகியும் மாநில அரசால் அளிக்கப்படவில்லை. இப்படி இருந்தால் விவசாயிகள் எப்படி ஆர்வமுடன் காப்பீட்டுத் திட்டத்தில் சேர முன்வருவார்கள்' என விவசாயிகள் கேள்வி எழுப்புகிறார்கள்.

கார் பருவம் என்பது ஜூனில் தொடங்கி அக்டோபர்-நவம்பரில் முடிவடையும். வேளாண்மைத் துறையினரும், புள்ளியியல் துறையினரும் பயிர் மகசூல் ஆய்வு முடித்து அரசுக்கு அறிக்கை அனுப்ப டிசம்பர் இறுதிவரை ஆகிவிடும். அதன் பின்புதான் அறிக்கை மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இழப்பீடு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். அதற்குள்ளாக அக்டோபர் இறுதி அல்லது நவம்பரில் பிசானப் பருவம் தொடங்கிவிடும் ஆதலால் கார் பருவத்துக்கான இழப்பீட்டை பிசானப் பருவத்துக்குள்ளாக வழங்க இயலாது என்பது வேளாண் துறையினரின் கருத்து.

ஆனால், கடந்த ஆண்டு கார் பருவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த ஆண்டின் கார் பருவம் முடிவடையும் நிலையில்தான் மத்திய அரசின் பங்குத்தொகை கிடைத்துள்ளது. எனவே, குறைந்தபட்சம், மத்திய அரசின் பங்குத்தொகை வழங்கப்படும்போது, மாநில அரசின் பங்குத்தொகையையும் சேர்த்து வழங்கினாலாவது பயனுள்ளதாக இருக்கும் என்கின்றனர் விவசாயிகள்.

இந்நிலையில், கடந்த ஆண்டில் பிசானப் பருவத்தில் பாதிக்கப்பட்ட 5,508 விவசாயிகளுக்கு இழப்பீடு கோரி அரசுக்கு அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டின் கார் பருவ விவசாயிகளுக்கான இழப்பீட்டுத் தொகையே தமிழக அரசால் இன்னும் வழங்கப்படாத நிலையில் பிசானத்திற்கான இழப்பீட்டுத் தொகை எப்போது வழங்கப்படுமோ என ஏக்கமுடன் காத்திருக்கின்றனர் விவசாயிகள்.

**ஆத்தூர் பகுதியில் பாலில் யூரியா**

First Published : 26 Oct 2010 09:44:32 AM IST

சேலம், அக். 25: பாலில் கொழுப்புச் சத்தை அதிகப்படுத்த ஆத்தூர் பகுதியில் பால் சேகரிப்பு மையங்களில் யூரியா சேர்க்கப்படுவதாக மாவட்ட ஊராட்சிக் குழுக் கூட்டத்தில் உறுப்பினர் சக்கரவர்த்தி குற்றஞ்சாட்டினார்.

÷சேலம் மாவட்ட ஊராட்சிக் குழுக் கூட்டம் அதன் தலைவர் சண்முகம் (பாமக) தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் அனைத்துக் கட்சி கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கவுன்சிலர் சதாசிவம் (பாமக) பேசும்போது, சேலம் மாவட்டத்தில் சுகாதாரமற்ற சூழலில் வைக்கப்பட்டுள்ள கோழிப்பண்ணைகளால் ஈக்கள் அதிகளவில் பெருகியுள்ளன.

இதனால் தொற்று நோய்கள் அதிகரித்து வருகிறது. மாவட்டம் முழுவதும் 2 மணி நேரம் அறிவிக்கப்பட்ட மின் வெட்டு அமலில் இருந்தாலும் குறிப்பிட்ட நேரத்துக்கு அதிகமாகவும், குறிப்பிடப்படாத நேரத்திலும் அடிக்கடி மின் வெட்டு ஏற்படுத்தப்படுகிறது. மின் இணைப்பு கேட்டு பதிவு செய்து பல மாதங்களாகியும் ஏராளமானோருக்கு மின் இணைப்பு வழங்கப்படவில்லை என்றார்.

தலைவர் சண்முகம்: சேலம் மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் அதிகம் பரவி வருகிறது. எனவே சுகாதாரத்துறை தலையிட்டு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சுகாதாரத் துறை அதிகாரி: சேலம் மாவட்டத்தில் கொசுக்களை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

சதாசிவம்: தருமபுரி ஊராட்சிக் குழு உறுப்பினர்களை தில்லிக்கு சுற்றுப்பயணம் அழைத்துச் சென்றதைப் போல் சேலம் மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்களையும் அழைத்துச் செல்ல வேண்டும்.

சக்கரவர்த்தி (காங்.): சேலம் மாவட்டம் ஆத்தூர், தலைவாசல் சுற்றுப் பகுதிகளில் பெரிய அளவில் கால்நடைகளை வளர்த்து வருபவர்களும், கால்நடை வளர்ப்பவர்களிடம் பால் பெறும் தனியார் பால் சேகரிப்பு நிறுவன முகவர்களும் பாலில் கொழுப்புச் சத்து அதிகமாகவும், பால் திடமானதாகவும் இருக்க வேண்டும் என்று எண்ணி முன்பு சர்க்கரையை கலந்து வந்தனர்.

ஆனால் தற்போது உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும் யூரியாவை கலக்கின்றனர். இதனால் குழந்தைகள், பொதுமக்கள் உயிருக்கு ஊறு விளையும் சூழல் விரைவில் உருவாகும். அதற்குள் சம்பந்தப்பட்ட துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பட்டுப்புழு வளர்த்தால் ஆண்டுக்கு ரூ. 1 லட்சம் வருவாய்**

First Published : 26 Oct 2010 09:36:16 AM IST

நாமக்கல், அக். 25: பட்டுப்புழு வளர்ப்பதன் மூலம் ஆண்டுக்கு ரூ. 1 லட்சம் வரை வருவாய் ஈட்டலாம். எனவே, நாமக்கல் மாவட்ட விவசாயிகள் பட்டுப்புழு வளர்ப்பில்

ஈடுபடுமாறு பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் கோபால்சாமி அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக, அவர் கூறியது:

நடப்பாண்டு மல்பரி நடவு செய்யும் புதிய விவசாயிகளுக்கு நடவு மானியமாக ஏக்கருக்கு ரூ. 4,125 வழங்கப்படுகிறது. அதிகபட்சமாக 2.5 ஏக்கருக்கு இந்த மானியம் வழங்கப்படும். இதேபோல், கூடுதலாக 1,500 சதுர அடிக்கு புழு வளர்ப்பு மனை அமைக்கும் விவசாயிகளுக்கு ரூ. 75 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. ஆயிரம் சதுர அடிக்கு கூடுதலாக மனை அமைக்கும் விவசாயிகளுக்கு ரூ. 50 ஆயிரம் மானியம் வழங்கப்படும். 700 சதுர அடிக்கு கூடுதலாக மனை அமைக்கும் விவசாயிகளுக்கு ரூ. 25 ஆயிரம் வழங்கப்படும். இவைத் தவிர, ஒரு ஏக்கர் மல்பரி நடவு செய்து சொட்டுநீர்ப் பாசனம் அமைத்தால் ரூ. 15 ஆயிரம் மானியம் வீதம், அதிகபட்சமாக 2.5 ஏக்கருக்கு ரூ. 37 ஆயிரத்து 500 வழங்கப்படுகிறது.

பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் என்பது மாதந்தோறும் வருவாய் ஈட்டக் கூடிய தொழிலாக அமைந்துள்ளது. மஞ்சள் நிற கலப்பினக் கூடு கிலோ ரூ. 200 முதல் ரூ. 230 வரை விற்பனை செய்யப்படுகிறது. சிஎஸ்ஆர் வெண்பட்டுக் கூடு கிலோ ரூ. 300 முதல் ரூ. 360 வரை விற்பனை செய்யப்படுகிறது.

மல்பரி நடவு செய்வதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ஏக்கருக்கு ரூ. 70 ஆயிரம் முதல் ரூ. 1 லட்சம் வரை வருவாய் ஈட்டலாம். விருப்பமுள்ள விவசாயிகள் நாமக்கல், துறையூர் சாலையில் உள்ள பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை நேரில் தொடர்பு கொள்ளலாம்.

## 10,800 ஹெக்டேரில் "ராஜராஜன் 1000' நெல் சாகுபடி

First Published : 26 Oct 2010 09:38:16 AM IST

நாமக்கல், அக். 25: நாமக்கல் மாவட்டத்தில் நடப்பாண்டு 10 ஆயிரத்து 800 ஹெக்டேர் பரப்பில் ராஜராஜன் நெல் சாகுபடி திடல் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் செ. காந்திச்செல்வன் தெரிவித்தார்.

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலத்தில் வேளாண் இடுபொருள்களுக்கான மானியம் வழங்குதல், துல்லிய பண்ணைத் திட்டம் துவக்கம், ராஜராஜன் 1000 நெல் சாகுபடி முறை ஆகிய முப்பெரும் விழா திங்கள்கிழமை நடந்தது.

மாவட்ட ஆட்சியர் சோ.மதுமதி தலைமை வகித்தார். இதில், 560 விவசாயிகளுக்கு ரூ. 42 லட்சம் மதிப்பிலான மானிய உதவிகளை வழங்கி, மத்திய அமைச்சர் செ.காந்திச்செல்வன் பேசியது:

ராஜராஜன் மன்னனுக்குப் புகழ் சேர்க்கும் வகையில், செம்மை நெல் சாகுபடி முறைக்கு ராஜராஜன் நெல் சாகுபடி எனப் பெயரிட்டு, இம்முறையை விவசாயிகளிடையே பரவலாக்கும் திட்டத்தைத் தீவிரப்படுத்த தமிழக முதல்வர் கருணாநிதி உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி, நாமக்கல் மாவட்டத்தில் நடப்பாண்டு 10 ஆயிரத்து 800 ஹெக்டர் பரப்பில் ராஜராஜன் 1000 நெல் சாகுபடி திடல் அமைக்கப்படுகிறது. இம்முறையில் சாகுபடிப் பணிகளை மேற்கொள்வதால், குறைந்த செலவில் கூடுதல் வருவாய் ஈட்டலாம்.

இதற்காக விவசாயிகளுக்கு போதிய பயிற்சிகளும், நேரடி செயல் விளக்கமும் அளிக்கப்பட்டு வருகிறது.

சேந்தமங்கலம் வட்டாரத்தில் ஆண்டுதோறும் 2 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்படும். இதில், ஆயிரம் ஹெக்டர் பரப்பில் ராஜராஜன் 1000 நெல்சாகுபடி முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

களை எடுக்கும் கருவி, நெல் நடவு எந்திரம் ஆகியவை பயன்படுத்தப்படுவதால் கூலி ஆள்களுக்கான செலவும் குறைகிறது.

தமிழக அரசு கடந்த 4 ஆண்டுகளில் விவசாயிகளுக்காகவ பல திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. திமுக அரசு பொறுப்பேற்றவுடன், விவசாயிகளின் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. கரும்பு விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை, நெல்லுக்கு கூடுதல் விலை, இலவச மின்சாரம், இலவச மின்மோட்டார் வழங்கும் திட்டம் என எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. எனவே, விவசாயிகள் தொடர்ந்து அரசுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்றார்.

வேளாண் இணை இயக்குநர் எஸ்.சிவராஜ், தோட்டக்கலை துணை இயக்குநர் எம்.தனகோபால், சட்டப்பேரவை உறுப்பினர் கே.பொன்னுசாமி மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், வேளாண் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 64.16 அடி**

First Published : 26 Oct 2010 09:07:59 AM IST

தஞ்சாவூர், அக். 25: மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 64.16 அடியாக இருந்தது.

அணைக்கு வினாடிக்கு 2,306 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 14,111 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. கல்லணையில் இருந்து வினாடிதோறும் காவிரியில் 1,516 கனஅடி, வெண்ணாற்றில் 2,535 கனஅடி, கல்லணைக் கால்வாயில் 2,513 கனஅடி, கொள்ளிடத்தில் 1,307 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது.

தினமலர்

**வேர்க்கடலையில் நேர்த்தி தொழில் நுட்பம்: வேளாண் துணை இயக்குனர் தகவல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 27,2010,01:24 IST

விருத்தாசலம் : வேர்க்கடலையில் அறுவடைக்குப் பின் நேர்த்தி தொழில் நுட்பங்களை கையாண்டால் நல்ல லாபம் பெறலாம் என வேளாண் அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து வேளாண் துணை இயக்குனர் தனவேல், விருத்தாசலம் கோட்ட வேளாண் அலுவலர் அமுதா கூட்டாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: விருத்தாசலம் மற்றும் கம்மாபுரம் ஒன்றியங்களில் தற்போது வேர்க்கடலை அறுவடை நடைபெறுகிறது.எண்ணெய் வித்துப் பயிரான வேர்க்கடலையில் எண்ணெய் அளவு குறையாமலும், தரம் கெடாமல் காத்திடவும், நல்ல விலையில் விற்றிடவும் கீழ்கண்ட நேர்த்தி முறைகளை அறுவடைக்கு பின் கையாள வேண்டும்.

கடலை செடிகளை 90 முதல் 110 வது நாளில் அறுவடை செய்ய வேண்டும். அறுவடைக்குப் பின் காய்களை தனியாகப் பிரித்து எடுத்து எட்டு மணி நேரம் காய

வைக்க வேண்டும். இதை மூன்று முதல் நான்கு நாட்கள் செய்ய வேண்டும். ஈரப்பதம் 7 முதல் 11 சதவீதம் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். நிலக்கடலை காய் களை நன்றாக காய வைக்கவில்லை எனில் அப்லாடாக்சின் என்ற பூஞ்சாண வித்துக்களால் தாக்கப் பட்டு தரம் பாதிக்கப்படும்.

காய்கள் தரம் உள்ளதாக இருக்க அதில் கலந்துள்ள கல், மண், தூசி, கெட்டுப்போன காய் கள், சுருங்கிய முதிராத காய்கள், இதர ரகக் காய்கள் இவைகளை தனித்தனியாக பிரித்துவிட வேண்டும். சுத்தம் செய்யப்பட்ட வேர்க்கடலைகளை நல்ல கோணிப் பைகளில் போட்டு தரையில் மரச்சட் டங்கள் கிடத்தி அதன் மேல் மூட்டைகளை அடுக்கி சேமிக்க வேண் டும். ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் உள்ள வணிகமுறை தரம் பிரிப்பு மையங்களுக்கு கொண்டு வந்து விற்று லாபம் பெறலாம்.மேலும் வேர்க்கடலை காய்களை உடைத்து பருப்பை எடுத்து காயவைத்து சுத்தம் செய்து சுத்தமான சாக்கு பைகளில் அடைத்து விற்பனை செய்வதன் மூலம் காய் களாக விற்பதை காட்டிலும் அதிக லாபம் பெறலாம்.

**தீபாவளி பண்டிகை எதிரொலி: எண்ணெய் விலை கிடு கிடு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 27,2010,02:36 IST

சேலம்: தீபாவளி பண்டிகை நெருங்கி வரும் நிலையில் தமிழகத்தில் அனைத்து வகையான எண்ணெய் விலையும் கடுமையாக உயர்ந்து வருகிறது.தமிழகத்தில் நடப்பாண்டில் எண்ணெய் வித்துக்களின் விளைச்சலில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு வரும் எண்ணெய் வித்துக்களின் வரத்து முற்றிலும் நின்று விட்டது.தமிழகத்தில் குறைந்த அளவில் விளைந்த சூரியகாந்தி, எள், கொப்பரை தேங்காய், நிலக்கடலை ஆகிய எண்ணெய் வித்துக்களை வடமாநிலங்கள், ஆந்திர வியாபாரிகளால் அதிக விலை கொடுத்து வாங்கிச் சென்று விட்டனர்.தமிழக எண்ணெய் மில்களுக்கு தேவையான நிலக்கடலை, சூரியகாந்தி விதை கிடைக்கவில்லை. மேலும் மார்க்கெட்டில் ஏற்பட்டுள்ள கடும் தட்டுப்பாடு காரணமாக விலையில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு உயர்வு ஏற்பட்டு வருகிறது.

தமிழகத்தில் நிலக்கடலை, சூரிய காந்தி எண்ணெய் விலை, இரண்டு மாதங்களாக தங்கத்தை போன்று தினம் ஓர் விலை ஏற்றத்தை சந்தித்து வருகிறது. கடந்த வாரம் வரை

லிட்டர் 80 ரூபாய்க்கு விற்ற கடலை எண்ணெய் தற்போது 85 ரூபாய்க்கு விற்கிறது.இதே போல் 15 லிட்டர் கொள்ளவு கொண்ட டின் 1,200 ரூபாய்க்கு விற்றது 1,275 ரூபாய்க்கு விற்கிறது. கடலை எண்ணெய் ரீபைன்ட் லிட்டர் 85 ரூபாய்க்கு விற்றது, 10 ரூபாய் அதிகரித்து நேற்று லிட்டர் 95 ரூபாய்க்கு விற்றது.இதனால் 15 லிட்டர் டின் 1,275 ரூபாய்க்கு விற்றது நேற்று டின் 1, 425 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. கடந்த மாதம் சூரிய காந்தி எண்ணெய் லிட்டர் 60 ரூபாய்க்கு விற்றது எட்டு ரூபாய் நேற்று லிட்டர் 68 ரூபாய்க்கு விற்கிறது. இதனை போல் 15 லிட்டர் டின் 900 ரூபாய்க்கு விற்றது 1,120 ரூபாய்க்கு விற்கிறது.

கடலை எண்ணெய், சூரிய காந்தி எண்ணெய்களை தொடர்ந்து பாமாயிலின் விலையும் உயர்ந்துள்ளது. பாமாயில் லிட்டர் 43 ரூபாய்க்கு விற்றது, நேற்று வரை 12 ரூபாய் அதிகரித்து லிட்டர் 55 ரூபாய்க்கு விற்கிறது.கடலை எண்ணெய், சூரிய காந்தி எண்ணெய், பாமாயில் ஆகியவற்றின் விலை உயர்ந்து விட்ட நிலையில் தேங்காய் எண்ணெய் விலையில் கடும் உயர்வு ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம் வரை தேங்காய் எண்ணெய் லிட்டர் 85 ரூபாய்க்கு விற்றது நேற்று ஒரே நாளில் 15 ரூபாய் அதிகரித்து லிட்டர் 100 ரூபாய்க்கு விற்கிறது.தேங்காய் எண்ணெய் மூலல்பொருளான தேங்காய் பருப்புக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதால் இதன் விலையில் மேலும் உயர்வு ஏற்படும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**சின்னவெங்காயத்தில் சாறு உறிஞ்சும் பூச்சி கட்டுப்படுத்த வேளாண்துறை யோசனை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 27,2010,02:30 IST

நாமக்கல்: "சின்ன வெங்காயத் தண்டின் அடிபாகத்தில் சாறு உறிஞ்சும் பூச்சி இருப்பின் அதைக் கட்டுப்படுத்த அதிக அளவில் சாம்பல் சத்து இடவேண்டும்' என, வேளாண் துணை இயக்குனர் நடராஜன் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்ட அறிக்கை: சின்ன வெங்காயத்தில் இலை, நுனி கருகல், இலைப் பேன் போன்ற சாறு உறிஞ்சம் பூச்சிகள் கருகல் நோய் ஏற்படுத்தும் பூசானத்தினால் தோன்றுகிறது. நுனிக்கருகிய வெங்காயத் தண்டின் அடிபாகத்தில் சாறு உறிஞ்சும் பூச்சி இருப்பின் அதைக் கட்டுப்படுத்த பயிருக்கு அதிக அளவில் சாம்பல் சத்து இடவேண்டும்.

மேலும், வேப்பம் பிண்ணாக்கு ஒரு ஹெக்டேருக்கு 60 கிலோ என்ற அளவில் நடவு செய்யும் போது இட வேண்டும்.

அதிக வறட்சி மற்றும் அதிக வெப்பநிலைகளில் இலைப்பேன் அதிகம் காணப்படும். இந்த சூழலை தவிர்க்க நீர்பாய்ச்சும் கால இடைவெளியை குறைத்து அதிக முறை நீர் கட்டவும், பயிர் காயாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தேவைப்பட்டால் களப்பணியாளர்களிடம் ஆலோசனை பெற்று மீதைல் டெமட்டான், டை மீதோயேட் மானோ குரோட்டோபாஸ் போன்ற பூச்சிக் கொல்லியில் ஏதாவது ஒன்றை ஒரு லிட்டர் நீருக்கு ஒரு மி.லி., என்ற அளவில் கலந்து இதனுடன் ஒட்டும் திரவம் ஒரு லிட்டர் நீருக்கு 0.5 மி.லி., என்ற அளவில் சேர்த்து கைத் தெளிப்பான் மூலம் மாலை நேரத்தில் பயிரில் நன்குபடும்படி தெளிக்க வேண்டும்.

இலைப்பேன் இல்லாமல் கருகலின் பாதிப்பால், அடித்தண்டு அழுகல் காணப்பட்டால் பூஞ்சானக் கொல்லியை தெளிக்க வேண்டும். ஒரு சதம் போர்ட்டோ கலவை அல்லது 0.2 சதவீதம் தாமிர பூஞ்சான கொல்லியை பயன்படுத்தலாம். அந்த பூஞ்சானக் கொல்லிகளுடன் ஒட்டும் திரவம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.5 மி.லி., என்றளவில் கலந்து இரண்டு, மூன்று முறை தெளிக்க வேண்டும்.

நுனிக்கருவில் நோயை கட்டுப்படுத்த ஒரு லிட்டருக்கு மான்கோசெப் இரண்டு கிராம் கலந்து 0.5 மி.லி., ஒட்டு திரவம் கலந்து தெளிக்க வேண்டும். அழுகல் நோய் கட்டுப்படுத்த ஒரு லிட்டருக்கு கார்பெண்டாசிம் 1 கிராம் வீதம் கலந்து கரைசலை வேர்பகுதி நனையுமாறு மண்ணில் ஊற்ற வேண்டும். களப்பணியார்களிடம் ஆலோசனை பெற்று இம்முறைகளை பின்பற்றலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மலர் சாகுபடியை அதிகரிக்க மானியம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 27,2010,02:30 IST

நாமக்கல்: வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில், 50 சதவீத மானிய விலையில் விதை, உரம் வழங்கப்படுகிறது. எருமப்பட்டி தோட்டக்கலை உதவி இயக்குனர் வெளியிட்ட அறிக்கை: 20110-11ம் நிதியாண்டில் உயர் தொழில்நுட்ப உற்பத்தி திறன் மேம்பாட்டு திட்டத்தின் கீழ், மலர் சாகுபடி பரப்பை அதிகப்படுத்த, மலர்கள் சாகுபடி செய்ய உள்ள விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் விதை, செடி மற்றும் உரம் வழங்கப்பட உள்ளது.

கனகாம்பரம், துளக்கமல்லி, சம்பங்கி போன்ற மலர்களை சாகுபடி செய்ய ஆர்வம் உள்ள விவசாயிகள் எருமப்பட்டி வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் செயல்பட்டு வரும் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறக்க காத்திருப்பு: பயிர்கள் கருகுவதால் வேளாண் துறை பரிந்துரை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 27,2010,02:08 IST

திருப்பூர்: திருப்பூர் மாவட்டத்தில் வாடி வரும் பயிர்களை பாதுகாக்க, புதிய அமராவதி ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடுவதற்கு, வேளாண் துறை பரிந்துரைத் துள்ளது. ஒரு வாரத்துக்குள் தண்ணீர் திறந்து விட்டால் மட்டுமே பயிர்களை பாதுகாக்க முடியும். வடகிழக்கு பருவமழை போதிய அளவு கிடைக்காததால், இந்தாண்டு பயிர்கள் காய்ந்து வருகின்றன. எனவே, உடுமலை அமராவதி அணையில் இருந்து புதிய ஆயக்கட்டு பாசனதுக்கு தண்ணீர் திறந்து விட விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பாக, கரூர் பொதுப் பணித்துறை செயற்பொறியாளர், திருப்பூர் வேளாண் துறை இணை இயக்குனரிடம் அறிக்கை கேட்டிருந்தார். வேளாண் அதிகாரி கள் ஆய்வு பணியில் ஈடுபட்டனர்.

அப்போது, பயிர்கள் காய்ந்து வரும் நிலையை கண்டறிந்தனர்; பயிர்களை காப்பாற்ற உயிர்த் தண்ணீர் திறந்து விட வேண்டும் என பரிந்துரை செய்துள்ளனர். திருப்பூர் வேளாண் இணை இயக்குனர் முத்துசாமி கூறியதாவது: திருப்பூர் மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள பரப்பளவில் மூன்றில் இரண்டு பகுதி மக்காச்சோளம், ஒரு பகுதி

கரும்பு, தென்னை உள்ளிட்ட இதர பயிர்களாக உள்ளன.  மழை அளவு குறைவாக இருப்பதால், தண்ணீர் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது. பயிர்கள் காய்ந்து வருகின்றன; ஒரு வாரத்துக்குள் தண்ணீர் திறந்து விடுவது அவசியம். மூன்று நிலைகளில் பயிர்கள் உள்ளன.

கிணற்று பாசனம் மூலம் பயிரிட்ட பயிர்கள் கதிர் விடும் பருவம்; ஏற்கனவே கிடைத்த வாய்க்கால் தண்ணீரில் பயிரிட்டவை வளர்ச்சி பருவம்; மழைக்கு பயிரிட்டவை, 10 நாள் வளர்ச்சியில் உள்ளன.  அடுத்த மழை கிடைக்கும் வரை  உயிர்த் தண்ணீர் அளிக்க வேண்டும். தண்ணீர் திறந்து விடுவதற்கு வேளாண் துறை பரிந்துரை செய்துள்ளது. இவ்வாறு, முத்துசாமி கூறினார்.

**மானியத்துடன் துல்லிய பண்ணை திட்டம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 27,2010,02:03 IST

உடுமலை: உடுமலை தாலுகாவில் எஸ்.சி., மற்றும் மலைவாழ் மக்களுக்காக வேளாண்துறை சார்பில் மானியத்துடன் கூடிய துல்லிய பண்ணை திட்டம் செயல்படுத்தப்படுகிறது என வேளாண்மை உதவி இயக்குநர்(பொறுப்பு)  திருமகள் ஜோதி தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: உடுமலை தாலுகாவில் 20 எக்டேர் பரப்பில் துல்லிய பண்ணை திட்டத்தை செயல்படுத்த அரசு நிதி ஒதுக்கியுள்ளது. விவசாயிக்கு தலா ஒரு எக்டேர் வீதம் எஸ்.சி., மற்றும் மலைவாழ் இனத்தை சேர்ந்த 20 விவசாயிகள் இத்திட்டத்தில் பயன்பெறலாம்.

திட்ட பயனாளிகளுக்கு 40 ஆயிரம் ரூபாய் வரை மானியம் வேளாண் பயிரில் சொட்டு நீர் பாசனம் அமைக்கவும், 15 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நீரில் கரையும் உரங்களும் வழங்கப்படும். வேளாண் பயிர் சாகுபடியை ஊக்குவிக்க அரசு இந்த திட்டத்தை செயல்படுத்துகிறது. பயனடைய விரும்பும் விவசாயிகள் குறைந்தபட்சம் ஒரு எக்டேர் நிலம் வைத்திருக்க வேண்டும். உடுமலை வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு விவசாயிகள் திட்டத்தில் பயன்பெறலாம் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தானியங்களை சேமிக்க விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 26,2010,22:51 IST

சிவகங்கை: மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனம், வேளாண் துறை இணைந்து, சிவகங்கையில் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தன. வேளாண் இயக்குனர் தட்சிணாமூர்த்தி துவக்கி வைத்தார். சேமிப்பு கிடங்கு சட்டத்தால் கிடைக்கும் பலன்கள், கிடங்குகளில் ரசீது பெறுதல், விவசாயப் பொருட்களை தரம் பிரித்தல், ஆணையத்தில் பதிவு பெற்ற கிடங்குகளில் சேமிப்பதால் கிடைக்கும் பலன்கள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. கலந்து கொண்ட விவசாயிகளுக்கு, விருதுநகர் சேமிப்பு கிடங்குகளில் செயல்முறை விளக்கம் அளிக்கப்படும்.

சென்னை சேமிப்பு ஆய்வு அலுவலர் கருணாகரன் கூறுகையில்,"" இதுவரை விவசாயிகள் சேமிப்பு கிடங்குகளில் வைக்கப்பட்ட தானியங்களின் அளவுப்படி வங்கிகளில் கடன் பெற்று வந்தனர். இனி வங்கிகள் மட்டுமல்ல வெளிநபர்கள், சந்தைகளில் தாங்களாகவே விற்பனை செய்யவும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதனால் விசாயிகளுக்கு கூடுதல் லாபம், நுகர்வோருக்கு மேம்படுத்தப்பட்ட சேவை கிடைக்கும்," என்றார். மண்டல சேமிப்பு அலுவலர்கள் தேவதாஸ், உமர் செரீப் கலந்து கொண்டனர்.

**மானிய விலையில் பாசன கருவிகள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 26,2010,23:08 IST

சாத்தூர்: சாத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் பழனிச்செல்வத்தின் செய்திக்குறிப்பு: நடப்பு ஆண்டில் இதுவரை பெய்ய வேண்டிய மழை அளவில் 35 சத வீதம் மழை பெய்துள்ளதால் சாத்தூர் வட்டாரத்தில் சாகுபடிபணி நடைபெறுகிறது. போதுமான அளவு மழை இல்லாததால் நிலத்தடி நீர் பற்றாக்குறை காரணமாக பயிர் சாகுபடியின் பரப்பளவு குறைந்துள்ளது. இறவை சாகுபடிக்கு நிலத்தடிநீர் அதிகமாக பயன்படுத்தப்படுதால் நீர் ஆதாரம் குறைந்து கொண்டே போகிறது.

சாத்தூர் வட்டாரத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் மக்காச் சோளப்பயிருக்கு 22 எக்டேர் பரப்பில் சொட்டு நீர்பாசனக்கருவிகள் அமைத்திட 50 சதவீதம் மானியத்தில் கருவிகள் வழங்கப்படும். பாசனக்கருவிகள் அமைத்திட விரும்பும் விவசாயிகள் சாகுபடி செய்யும் பரப்பின் ஆதாரம் அடங்கல், ரேஷன் கார்டு நகல், சாகுபடியாளரின் போட்டோ 2 ஆகியவற்றுடன் வேளாண்மை அலுவலர்களிடம் பதிவு செய்யலாம் எனத் தெரிவித்துள் ளார்.

**பயறுவகைப் பயிரில் டிஏபி கரைசல் தெளிக்கும் முறை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 27,2010,02:43 IST

திருநெல்வேலி : பயறுவகைப் பயிரில் டிஏபி கரைசல் தெளிக்கும் முறைப்பற்றி செங்கோட்டை வேளாண் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செங்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் தெரிவித்துள்ளதாவது: செங்கோட்டை வட்டாரம், செங்கோட்டை, தவணை, கற்குடி, வேம்பநல்லூர், இலத்தூர் ஆகிய பகுதிகளில் மானாவாரி பயறு வகைப் பயிர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், மானாவரி பயறு வகைப்பயிரில் 2 சத டிஏபி கரைசலை, விதைத்த 25ம் நாள் ஒரு முறையும், 15 நாட்கள் கழித்து மறுமுறையும் தெளித்திட வேண்டும்.

டிஏபி கரைசலை தெளிப்பதற்கு முதல் நாள் இரவு ஏக்கருக்கு 4 கிலோ டிஏபி உரத்துடன் 10 லிட்டர் நீர் கலந்து வைத்திட வேண்டும். மறுநாள் அவற்றில் தெளிந்த நீரை மட்டும் தனியாக எடுத்து, 190 லிட்டர் நீர் கலந்து மாலை வேளைகளில் நிலத்தில் நீர் இருக்குமாறு பார்த்துக் கொண்டு தெளித்திட வேண்டும். முதல் முறை இவ்வாறு தெளிப்பதன் மூலம் பூக்கள் அதிகமாகப் பூக்கும். இரண்டாம் முறை தெளிப்பதன் மூலம் பூத்த பூக்கள் திரட்சியான காய்களாக மாறும். இவ்வாறு டிஏபி கரைசல் தெளித்து, பயறு வகைப் பயிரில் உச்ச மகசூல் அடையலாம். இவ்வாறு செங்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

**நவீனதொழில்நுட்பம் - ஆட்டுஎரு உரம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 27,2010,00:00 IST



ஆட்டு எருவில் மாட்டு எருவில் உள்ளதைப் போல் 2 மடங்கு தழைச்சத்தும் சாம்பல்சத்தும் உள்ளது. ஒரு ஆடு ஒரு வருடத்திற்கு 500 கிலோவில்இருந்து 750 கிலோ வரை எரு உற்பத்தி செய்ய வல்லது. 100 ஆடுகள் உள்ள கிடை வைத்தால் ஒரு ஏக்கருக்கு வேண்டிய வளத்தைப் பெறலாம். ஆட்டு எருவில் உள்ள சத்துக்களின் அளவு ஆட்டு இனம் மற்றும் அவைகளுக்கு அளிக்கப்படும் தீவனத்தைப் பொறுத்தே இருக்கும். ஆடுகளுக்கு புரதச்சத்து குறைந்த தீவனங்களை அளிக்கும்போது எருவில் தழைச்சத்து அளவு குறைந்தே இருக்கும். ஆட்டின் சிறுநீரில் தழைச் சத்தின் அளவு அதிகமாகவும் இருக்கும். புழுக்கையில் நுண்ணூட்டச்சத்துக்களும் தாது உப்புக்களும் உள்ளன. எனவே புரதச்சத்து மிக்க தீவனங்களான குதிரைமசால், முயல்மசால், வேலிமசால், சூபாபுல், தட்டைப்பயறு போன்றவற்றை ஆடுகளுக்கு கொடுத்தால் தழைச் சத்து மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களின் அளவு ஆட்டு எருவில் அதிகமாக இருக்கும். ஆட்டு எருவில் 60லிருந்து 70 சதம் தண்ணீர் சத்தும், 2 சதம் தழைச் சத்தும், 0.4 சதம் மணிச் சத்தும், 1.7 சதம் சாம்பல் சத்தும் உள்ளது.

ஆழ்கூள முறை உர உற்பத்தி: இம் முறையில் கொட்டகையின் நிலப் பரப்பிற்கு ஆழ்கூளமாக நிலக் கடலைத் தோல், துண்டிக்கப் பட்ட வைக்கோல், இலைச்சருகுகள், மரத்தூள், தேங்காய் நார்கழிவு போன்றவற்றை பயன்படுத்தலாம். ஆடு ஒன்றுக்கு 7 கிலோ அளவில் ஆழ் கூளத்தை தரையில் பரப்ப வேண்டும். ஆழ்கூளத்தின் அளவு அரை அடி உயரத்திற்கு குறைவில்லாமல் இருக்க வேண்டும். சிறுநீர் ஆழ்கூளத்தால்

உறிஞ்சப்படுவதால் சிறுநீரில் இருந்து தழைச்சத்து ஆவியாகி விரயமாவது குறைகிறது. இந்த முறையில் ஆடுகளுக்கு நல்ல ஊட்டச்சத்து மிக்க பசுந்தீவனம் மற்றும் அடர்தீவனம், தண்ணீர் தேவைக் கேற்ப கொடுப்பதால் ஆடுகள் நன்கு உட்கொண்டு அதிக புழுக்கை மற்றும் சிறுநீரை வெளியிடுகிறது.

ஆழ்கூளத்திலுள்ள ஈரத்தன்மையைப் பொறுத்து 3லிருந்து 4 வருடத்திற்கு ஒரு முறை ஆழ்கூள எருவை எடுத்துக் கொள்ளலாம். இந்த முறையில் பத்து ஆடுகளிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு இரண்டரை டன் தரமான எரு கிடைக்கும். இந்த எருவில் 50 கிலோ பொட்டாஷ் உரத்திலுள்ள சாம்பல் சத்தும் கிடைக்கும். ஆட்டுஎருவில் உள்ள தழைச்சத்து மெதுவாக வெளிப்படுவதால் பயிர்களின் தேவைக்கேற்ப தழைச்சத்து சீராக கிடைக்கிறது. ஆனால் ரசாயன உரம் தழைச்சத்தை உடனடியாக வெளியிடுவதால் நிறைய தழைச்சத்து ஆவியாகி விரயமாகிறது.
ஆழ்கூள முறையில் வளர்க்கப்படும் ஆடுகளிலிருந்து பெறப்படும் எருக்கள் களைகளின் விதைகள் இல்லாமல் இருப்பதால் வேளாண்பயிர் சாகுபடியிலும் களைகள் குறைவாக இருக்கும். வீடுகளில் மண்தொட்டி மற்றும் பாலிதீன் பைகளில் மரக்கன்று கள் உற்பத்தி செய்யும் விவசாயிகள் இந்த ஆழ்கூள எருவைப் பயன்படுத்தி களைகளற்ற நாற்றங்கால் அமைத்து நல்ல தரமான கன்றுகளை உற்பத்தி செய்யலாம்.
ஆழ்கூள உரத்தை நெல், தக்காளி, மிளகாய், கத்தரி போன்ற பயிர்களின் நாற்றங்கலில் இட்டு களைகளின் அளவைக் கட்டுப்படுத்தி அதிக லாபம் பெறலாம்.

## தீவனத்தில் தாது உப்புக்களின் முக்கியத்துவம்

பதிவு செய்த நாள் : அக்டோபர் 27,2010,00:00 IST



ஹார்மோன்களில் உற்பத்தியிலும், ஆற்றல் பயன்பாட்டிலும் உள்ள என்சைம் தொகுப்பில் நுண்ணூட்டச் சத்துக்கள் முக்கிய பங்கு வகிப்பதால் அவற்றின் பற்றாக்குறை ஏற்படும்போது, கால்நடைகளின் பால் உற்பத்தியிலும் இனப் பெருக்கத்திலும் பாதிப்பையே ஏற்படுத்துகின்றன. எனவே, அதற்கேற்றவாறான தாது சத்துக்களை கால்நடைகளுக்கு கொடுக்க வேண்டும்.

**தாமிரம்:** இந்த நுண்ணூட்டமானது என்சைம்களின் முக்கியப் பணிகளான இரும்புச்சத்தின் வளர்சிதை மாற்றத்திற்கு மத்திய நரம்பு மண்டலத்தின் நிலைத்த செயல்பாட்டிற்கும் மற்றும் ரத்த சிவப்பு அணுக்களின் உற்பத்திக்கும் அவசியமாக தேவைப்படுகிறது.

**கோபால்ட்:** கோபால்ட் நுண்ணூட்டமானது கால்நடைகளின் வைட்டமின் பீ12 உற்பத்திக்கு அவசியம் தேவைப்படுகிறது. கால்நடைகளின் உடலில் கோபால்ட் தேவையானஅளவு சேமிப்பு இல்லாதபோதும், வைட்டமின் பீ12 உற்பத்தி குறையும்போதும் மாற்று வகையில் இந்நுண்ணூட்டத்தைக் கொடுக்க பரிந்துரை செய்யப்படுகிறது.

**மாங்கனீசு:** மாங்கனீசு பல்வேறு என்சைம்களின் செயல்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது. மாங்கனீசு ஆனது கல்லீரலில் சேமித்து வைக்கப்பட்டு சத்துப்பற்றாக்குறை ஏற்படும் காலங்களிலும் அல்லது உணவு இல்லாத நேரங்களிலும் உடலுக்கு வழங்கப் படுகிறது. இச்சத்துப் பற்றாக்குறையால் இனப்பெருக்கத்திறன் குறைவதோடு கால்கள் பலவீனமடையவும் செய்கிறது. கால்நடைகளின் அபிவிருத்திக்கும் தரமான கன்றுகள் ஈனுவதற்கும் மாங்கனீசு மிக அதிக அளவில் தேவைப்படுகிறது.

**செலினியம்:** இந்த நுண்ணூட்டமானது நோய் எதிர்ப்புத்திறனுக்கும் நச்சு முறிவுப் பணிக்கும் இன்றியமையாதது. இப்பற்றாக்குறையை தேமல் மூலம் இளம் கன்றுகளில் தெளிவாக காணலாம்.

**துத்தநாகம்:** புரோட்டீன் மற்றும் கார்போஹைட்ரேட்டுகளின் வளர்சிதை மாற்றத்திற்கு தேவையான என்சைம்களின் செயல்பாட்டையும், நோய் எதிர்ப்பு சக்தியையும் ஊக்குவிக்கும் துத்தநாகம் சத்து இன்றியமையாததாக இருக்கிறது.

**அயோடின்:** உடலில் வெப்பநிலையை சீராக வைப்பதற்கும், தைராய்டு சுரப்பி சரியாக சுரப்பதற்கும் அயோடின் அவசியமாகிறது.

**இரும்பு**: இரும்புச் சத்தானது கால்நடைகளின் ரத்த உற்பத்தியிலும், உடலின் பல்வேறு பாகங்களுக்கு ஆக்சிஜனை எடுத்துச் செல்லும் என்சைம்களிலும் பணிகளிலும் ஈடுபடுகிறது.

தாது உப்புக்கலவை

அளித்தலின் நன்மைகளாவன  கன்றுகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றது. உட்கொண்ட தீவனத்தின் செரிமானத்தை அதிகரிக்கின்றது. பால் உற்பத்தியைப் பெருக்குகின்றது. இனப் பெருக்கத் திறனை அதிகரித்துக் கன்றுகள் பிறக்கும் இடைவெளியினைக் குறைக்கின்றது. உற்பத்தித் திறன் வாழ்நாட்களை அதிகரிக்கச்

செய்கின்றது. நோய் எதிர்ப்பு திறன் கூடுகிறது. கன்று ஈனும் காலத்தில் ஏற்படும் நோய்களை (பால் காய்ச்சல், சர்க்கரைக் குறைவு நோய் மற்றும் சிறுநீரில் ரத்தப்போக்கு போன்ற நோய்களை) தவிர்க்கின்றது.

**தொடர்புக்கு: ஆர்.ஜி.சுந்தர், 0424-226 6966, 99943 72166.-கே.சத்தியபிரபா, பி.எப்.டெக்., 96591 08780.**

**நெய்வேலி காட்டாமணக்கு கட்டுப்பாடு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 27,2010,00:00 IST

நெய்வேலி காட்டாமணக்கு (ஐப்போமியா கார்னியா) களைச்செடி ""தென் அமெரிக்கா'' நாட்டிலிருந்து இந்தியாவிற்கு சுமார் 50 வருடங்களுக்கு முன் அலங்காரத்திற்கும், வேலி தடுப்பானாகவும் மற்றும் பசுந்தாள் உரமாகவும் பயன்படுத்துவதற்கு அறிமுகப் படுத்தப்பட்டது. இது ஒரு நிரந்தரச் செடி வகையைச் சார்ந்தது. சுமார் 2.3 மீட்டர் உயரம் வரை வளரும். இதன் தண்டுகள் பாய்போல் நிலத்தின்மேல் பின்னிப் பிணைந்து படரும் தன்மையும் கொண்டது. தண்டின் கணுக்கள் நிலத்தில் படும்போது அதிலிருந்து வேர்கள் தோன்றி பிறகு கணுவிலிருந்து புதிய தண்டுகள் செங்குத்தாக மேல்நோக்கி வளர ஆரம்பிக்கின்றன.

இந்த செடி நீர்ப்பாசன மற்றும் வடிகால் வாய்க்கால்களில் நீரின் சீரான போக்கைத் தடுக்கிறது. ஏராளமான நீர் ஆவியாகி வீணாகிறது. இச்செடியின் வளர்ச்சியினால் குளம் மற்றும் குட்டை போன்ற நீர்நிலைகளில் பிராணவாயு சேர்க்கை தடுக்கப்பட்டு மீன்வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது.

**ரசாயன முறை:** களைக்கொல்லி மூலம் இச்செடியை கட்டுப்படுத்துவது மிகவும் சிறந்தது மற்றும் சிக்கனமானது. நெய்வேலி காட்டாமணக்கு செடியை கோடைகாலத்தில் 0.2 சத 2, 4-டி சோடியம் உப்பு (ஒரு லிட்டர் நீரில் 2 கிராம் மருந்து) என்ற அளவில் தெளித்து நல்ல முறையில் கட்டுப்படுத்தலாம். இம்மருந்துடன் ஒரு லிட்டர் நீருக்கு யூரியா (10 கிராம்)

மற்றும் சோப்பு திரவத்தை (ஒரு மில்லி) கலந்து தெளிப்பதால் மருந்து இலைப்பரப்பில் அதிக காலம் தங்கி  இருந்து விரைவாகவும் அதிக அளவிலும் உட்கிரகிக்க உதவுகிறது. இதனால் செடி வேருடன் அழிக்கப்படுகிறது. இம்மருந்து கரைசலை செடியின் இலைப்பாகம் மற்றும் தண்டுப்பாகம் நன்கு நனையும்படி மேலும் கீழும் கைத்தெளிப்பான் கொண்டு இலை நுனியிலிருந்து ஒரு சொட்டு மருந்து கீழே விழும்வரை நிதானமாகத் தெளிக்க வேண்டும்.

இம்முறையில் தெளிப்பதற்கு செடியின் அடர்த்தி மற்றும் உயரத்தைப் பொறுத்து ஒரு எக்டர் பரப்பளவிற்கு சுமார் 1000 முதல் 3000 லிட்டர் நீர் தேவைப்படுகிறது. அடர்த்தியாகவும், உயரமாகவும் உள்ள செடிகளில் மருந்து தெளிக்கும்போது ஓரிரு செடிகள் மீது படாமல் இருக்க வாய்ப்புண்டு. அவ்வாறு மருந்து படாமல் தவறிய செடிகளில் வாட்டம் இல்லாமல் இருப்பதை மருந்து தெளித்த ஓரிரு நாட்களில் கண்டுகொள்ளலாம். இவ்வாறு விடுபட்ட இச்செடிகளின்மீது மீண்டும் களைக்கொல்லி கரைசலைத் தெளிக்க வேண்டும்.
களைக்கொல்லி தெளித்த பிறகு செடியில் காணப்படும் மாற்றங்கள்: களைக்கொல்லி கரைசல் அடித்தபின்பு நெய்வேலி காட்டாமணக்கு செடியானது அடுத்த 3-4 மணி நேரத்திலேயே வாட ஆரம்பிக்கும். மூன்றாம் நாள் அடிப்பாக இலைகள் மஞ்சள் நிறமாக மாறிவிடும்.

நான்காம் நாள் முதல் செடியின் நுனியில் இருந்து தண்டு கருக ஆரம்பித்து 21ம் நாள் செடி முழுவதும் காய்ந்து உலர்ந்துவிடும். இதைப்பிடுங்கி எரித்துவிட வேண்டும்.  மருந்தின் நச்சுத்தன்மையும் சுற்றுப்பற சூழ்நிலை பாதிப்பும்: இம்மருந்தின் நச்சுத்தன்மை மிகவும் குறைவு. நீரில் இம்மருந்தானது அதிவிரைவில் சிதைந்துவிடுகிறது. மேலும் இம்மருந்தைப் பரிந்துரைக்கப்பட்ட 0.2 சதவீத அடர்த்தியில் 2, 4-டி சோடியம் உப்பைத் தெளித்தலால் அதன் எஞ்சிய மருந்துகள் நிலத்தில் முதல் 10-20 நாட்கள்தான் காணப்படும்.

அதன்பிறகு, கோடைக்காலத்தில் நிலவும் வறட்சி மற்றும் அதிக வெப்பநிலை மற்றும் சூரிய வெளிச்சத்திலும் மருந்தின் வீரியம் சிதைந்து போய்விடுகிறது. நெய்வேலி

காட்டாமணக்கு செடியை 2, 4-டி சோடியம் உப்புக்கரைசலை 0.2 சத அடர்த்தியில் கோடைகாலத்தில் தெளித்து அழிப்பதால் சுற்றுப்புற சூழ்நிலைக்கு எவ்வித மாசுபாடும் ஏற்படாது என்பது தெளிவு.

**ரா.பாலசுப்பிரமணியன்,**

**நீ.மலர்க்கொடி, செ.நந்தகுமார்,**

**பெ.ஆனந்தகுமார், சு.திருமலைக்குமார்,**

**உழவியல் துறை,வேளாண்மைக்கல்லூரி மற்றும்**

**ஆராய்ச்சி நிலையம், மதுரை.**

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 27,2010,00:00 IST

**மண்புழு உரம்:** ஆட்டு எருவைப் பயன்படுத்தி மண்புழு உரம் தயாரித்தல் சிறந்த முறையாகக் கருதப்படுகிறது. ஆட்டு எருவினை மண்புழு உண்டு செரித்த கழிவுகள் வெளிவரும்போது அவற்றின் பயன்படக்கூடிய சத்துக்களின் அளவு அதிகரிக்கிறது. நாம் வளர்க்கும் ஆடுகளின் எண்ணிக்கையைப் பொறுத்து மண்புழு உரத்திற்கு தொட்டிகளை கட்டி ஆட்டு எரு மூலம் மண்புழு உரத்தினை தயாரித்து விவசாயிகள் தங்கள் விவசாய நிலங்களுக்கு பயன்படுத்துவதோடு பிற பண்ணைகளுக்கும் விற்று லாபம் ஈட்டலாம்.

**பால்கோவா-கோவா பொருட்கள் தயாரித்தல்:**
5 லிட்டர் பாலைச் சுண்டக் காய்ச்சும்பொழுது 1 கிலோ கோவா கிடைக்கும். 5 பங்கு கோவாவுடன் ஒரு பங்கு சர்க்கரையைச் சேர்த்தால் பேடா கிடைக்கும். ஏலக்காய் மற்றும் குங்குமப் பூவையும் சேர்க்கலாம். 5 பங்கு கோவாவுடன் 1 பங்கு சர்க்கரையை பாகாகச் சேர்த்து சூடு செய்தால் பர்பி கிடைக்கும். ஏலக்காய் மற்றும் குங்குமப்பூவையும் சேர்க்கலாம். கலாகந்த்:பால் கொதிவந்த 15நிமிடத்தில் 5 லிட்டர் பாலுக்கு 1 கிராம் சிட்ரிக் அமிலத்தை 100 மிலி தண்ணீரில் கரைத்துப் பால் சிறிதளவு திரியும்வரை ஊற்ற வேண்டும்.

சுண்டி கெட்டியானபிறகு 5 லிட்டர் பாலுக்கு 500 கிராம் சர்க்கரை சேர்த்து சூடு செய்தால் கலாகந்த் கிடைக்கும். பால் சாக்லேட்: பால் கொதி வந்த 15 நிமிடத்தில் 5 லிட்டர் பாலுக்கு 100 கிராம் கோகோ பவுடர் 500 கிராம் சர்க்கரை மற்றும் 100 கிராம் வனஸ்பதி சேர்த்து சூடு செய்தால் பால் சாக்லேட் கிடைக்கும். குல்பி: 10 லிட்டர் பாலை 5 லிட்டராகும் வரை சுண்டக் காய்ச்ச வேண்டும். இதில் 750 கிராம் சர்க்கரை மற்றும் ஏலக்காய் சேர்த்து ஆறிய பிறகு குல்பி கப்களில் ஊற்றி மூடவேண்டும். இதை 5 பங்கு ஐஸ் மற்றும் 1 பங்கு உப்பு உள்ள குடத்தில் போட்டுக் குலுக்கி உறையவைத்தால் குல்பி கிடைக்கும்.

-டாக்டர் எஸ்.தரம்

***திருத்தணி அருகே 14 ஏக்கர் கரும்பு தோட்டம் தீயில் கருகியது***

*திருத்தணி, அக்.27–*

*திருத்தணி அருகே 14 ஏக்கர் கரும்பு தோட்டம் தீயில் கருகியது.*

*கரும்பு தோட்டம் கருகியது*

*திருத்தணி அருகே உள்ள லட்சுமாபுரத்தை சேர்ந்தவர்கள் ராமன், வெங்கடேஷ், லட்சுமிபதி. இவர்களுக்கு முறையே 4 ஏக்கர், 3 ஏக்கர், 7 ஏக்கர் நிலம் இருந்தது. இவர்கள் அனைவரும் தங்கள் நிலத்தில் கரும்பு பயிரிட்டிருந்தனர்.*

*இந்த நிலையில் இவர்களது கரும்பு தோட்டத்தில் திடீர் என்று தீ விபத்து ஏற்பட்டு 14 ஏக்கரில் இருந்த கரும்பு தோட்டம் தீயில் கருகியது. தகவல் அறிந்த திருத்தணி தீயணைப்பு துறையினர் உடனடியாக அங்கு சென்று பல மணி நேரம் போராடி தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இருப்பினும் 14 ஏக்கர் நிலமும் தீயில் கருகியது.*

*ரூ. 5 லட்சம்*

*இதை அறிந்த திருத்தணி தாசில்தார் பாண்டுரங்கன், துணை தாசில்தார். பார்த்திபன், வருவாய் ஆய்வாளர் தர்மேந்திரன், கிராம நிர்வாக அலுவலர் அருணாசலம்,*

ஊராட்சிமன்ற தலைவர் குமரவேல் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஆறுதல் கூறினர்.

தீயில் கருகி நாசம் ஆன கரும்பின் மதிப்பு ரூ.5 லட்சம் என்று கூறப்படுகிறது. இது குறித்து கனகம்மாசத்திரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.